# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 15, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிரான்ஸில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, நைஸ் நகரில் அந்நாட்டின் அதிபர் இமானுவல் மேக்ரானுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

(i) செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.), பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர உறவை மேலும் வலுப்படுத்த இரு தலைவர்களும் உறுதிபூண்டனர்.

(ii) ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், ஸ்லோவாக்கியாவுக்கு பிரதமர் மோடி ஒரு வார கால அரசுமுறைப் பயணத்தை சனிக்கிழமை (ஜூன் 13) தொடங்கினார். முதலாவதாக, பிரான்ஸில் மத்திய தரைக் கடலையொட்டி அமைந்துள்ள துறைமுக நகரான நைஸை வந்தடைந்தார். விமான நிலையத்திலும், அவர் தங்கிய விடுதியிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

(iii) இந்நிலையில், இந்தியா, பிரான்ஸ், பிற நாடுகளின் முன்னணி புத்தாக்க நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் நோக்கில், இந்தியாவால் முன்னெடுக்கப்பட்டுள்ள 'பாரத் இனோவேட்ஸ்' நிகழ்வை, நைஸ் நகரில் பிரதமர் மோடியும், அதிபர் இமானுவல் மேக்ரானும் கூட்டாகத் தொடங்கி வைத்தனர்.

(iv) இதைத் தொடர்ந்து, இருவரும் உயர்நிலைப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய-சர்வதேச விவகாரங்கள் குறித்தும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

(v) இருதரப்பு உறவில் அடுத்த கட்டம்:

- இது தொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘இந்தியா-பிரான்ஸ் வலுவான கூட்டுறவு அடுத் தகட்டத்தை எட்டியுள்ளது.
- இருதரப்பு உலகளாவிய சிறப்பு உத்திசார் கூட்டுறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பிரதமர் மோடியும், அதிபர் மேக்ரானும் விரிவாக ஆலோசித்தனர். புத்தாக்கம், வர்த்தகம், முதலீடு, நிலையான வளர்ச்சி, பாதுகாப்பு, கலாசாரம், மக்கள் ரீதியிலான தொடர்புகள் சார்ந்த உறவுகள் மேம்பாடு குறித்து இருவரும் விவாதித்தனர்.

(vi) இந்தியாவின் 11-ஆவது பெரிய முதலீட்டாளர்:

- இந்தியா-பிரான்ஸ் இருதரப்பு வர்த்தக மதிப்பு, கடந்த 2025-26-இல் 15.81 பில்லியன் டாலராகும். முந்தைய ஆண்டில் இது 15.19 பில்லியன் டாலராக இருந்தது.
- கடந்த 2000, ஏப்ரல் முதல் 2025, மார்ச் வரை பிரான்ஸில் இருந்து இந்தியாவுக்கு கிடைக்கப்பெற்ற அந்நிய நேரடி முதலீடு 12.25 பில்லியன் டாலராகும். இதன்மூலம் இந்தியாவின் 11-ஆவது பெரிய முதலீட்டாளராக பிரான்ஸ் உள்ளது.

2. ஃபார்முலா ஒன் (எஃப்1) கார் பந்தயத்தின் நடப்பு சீசனில், 7-ஆவது ரேஸான பார்சிலோனா கிராண்ட் ப்ரீயில் பிரிட்டன் வீரரும், ஃபெராரி டிரைவருமான லீவிஸ் ஹாமில்டன் வெற்றிபெற்றார்.

(i) மெர்சிடஸ் அணியிலிருந்து ஹாமில்டன் ஃபெராரி அணிக்கு அவர் இடம் பெயர்ந்து 2 ஆண்டுகள் ஆகியிருக்கும் நிலையில், அவர் பெற்ற முதல் வெற்றி இதுவென்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 40 ரேஸ்களில் இது அவரின் முதல் வெற்றி என்பதும் நினைவுகூரத்தக்கது.

(ii) இந்த வெற்றியின் மூலமாக, இத்தாலி வீரரும், மெர்சிடஸ் டிரைவருமான கிமி ஆன்டனெலியின் தொடர் வெற்றிகளுக்கு (5) அவர் முற்றுப்புள்ளி வைத்தார். இந்தப் பந்தயத்தில் வெற்றி மேடையேறிய 3 வீரர்களுமே பிரிட்டன் நாட்டவர்களாவர்.

(iii) ஹாமில்டன் முதலிடம் பிடித்த நிலையில், மெர்சிடஸ் வீரரான ஜார்ஜ் ரஸ்ஸெல், மெக்லாரென் டிரைவரும், நடப்பு சாம்பியனுமான லாண்டோ நோரிஸ் ஆகியோர் முறையே 2 மற்றும் 3-ஆம் இடங்களைப் பெற்றனர். இத்துடன் ஹாமில்டன், தனது எஃப்1 வெற்றிகளின் எண்ணிக்கையை 106-ஆக அதிகரித்துக் கொண்டுள்ளார்.

3. இந்தியாவில் வாகனங்களில் 100 சதவீத எத்தனால் எரிபொருளைப் பயன்படுத்த மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி கையொப்பமிட்டு ஒப்புதல் அளித்துள்ளார்.

(i) நாகபுரியில் நடைபெற்ற இந்திய எத்தனால் உயிரி எரிபொருள் மாநாட்டில் அவர் இத்தகவலைத் தெரிவித்தார். இது தொடர்பாக கட்கரி மேலும் கூறியதா வது:

- இந்தியாவில் 100 சதவீத எத்தனால் எரிபொருளைப் பயன்படுத்த அனுமதிப்பது தொடர்பான கோப்பில் சனிக்கிழமை (ஜூன் 13) இரவு 8 மணிக்கு கையொப்பமிட்டேன். இதன் மூலம் 100 சதவீத எத்தனால் எரிபொருளுக்கு சட்டப்பூர்வ ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் 100 சதவீதம் எத்தனால் எரிபொருள் பயன்பாட்டு வாகனங்களுக்கு புதிய கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.
- மாருதி-சுசூகி, டொயோட்டா, ஹுண்டாய், எம்.ஜி. நிறுவனங்கள் அடுத்த ஒரு மாதத்துக்குள் இதற்கான வாகனங்களையும் அறிமுகப்படுத்த இருக்கின்றன என்றார்.
- 100 சதவீத எத்தனால் எரிபொருள் என்று கூறப்பட்டாலும், அதில் 93 முதல் 95 சதவீதம் எத்தனால் இருக்கும். அத்துடன் பெட்ரோல் மற்றும் பிற வேதியியல் சேர்மானங்கள் இடம் பெறும். அப்போதுதான் வாகனத்தை 'ஸ்டார்ட்' செய்வது எளிதாக அமையும்.
- இப்போது இருக்கும் 20 சதவீத எத்தனால் கலப்பு எரிபொருள் வாகனங்களை 100 சதவீத எத்தனால் எரிபொருளுக்கு மாற்றுவது எளிதாக இருக்கும். 100 சதவீத எத்தனாலுக்கு ஏற்பட வாகனங்களின் என்ஜின், எரிபொருள் அமைப்பு உள்ளிட்டவற்றில் மாற்றங்கள் இருக்கும்.
- எனினும், மேற்காசிய போர் உள்ளிட்ட காரணங்களால் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு, விலை உயர்வு போன்ற பிரச்னைகளை எதிர்கொள்ள 100 சதவீத எத்தனால் என்பது காலப்போக்கில் சிறந்த தீர்வாக இருக்கும்.

4. ரஷியாவிடமிருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவது தொடர்ந்து அதிகரித்து வருகிறது; கடந்த மே மாதத்தில் மட்டும் ரூ.59,000 கோடிக்கு அந்த நாட்டிடமிருந்து கச்சா எண்ணெய்யை இந்தியா கொள்முதல் செய்துள்ளது. இதுகுறித்து ஐரோப்பாவை சேர்ந்த

சிஆர்இஏ அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்ப தாவது:

(i) மே மாதத்தில் ரஷியாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்கிய அளவு மேலும் 8 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியா வாங்கிய மொத்த கச்சா எண்ணெய்யில் 83 சதவீதத்தை ரஷியாவிடம் இருந்தே கொள்முதல் செய்துள்ளது. ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை மட்டும் ரூ.52,813 கோடிக்கு இந்தியா வாங்கியுள்ளது.

(ii) இதுதவிர எண்ணெய் பொருள்களை ரூ.6,051 கோடிக்கும், நிலக்கரியை ரூ.4,720 கோடிக்கும் இந்தியா இறக்குமதி செய்துள்ளது.

(iii) ரஷியாவிடம் இருந்து 2025 நவம்பரில் கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்திய அரசுக்குச் சொந்தமான சுத்திகரிப்பு நிலையங்கள் மீண்டும் அதிகம் கொள்முதல் செய்து வருகின்றன. குறிப்பாக, புது மங்களூரு சுத்திகரிப்பு நிலையம் முந்தைய மாதத்தைவிட மே மாதத்தில் கூடுதலாக 13 சதவீதம் கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்துள்ளது.

(iv) விசாகப்பட்டினம் சுத்திகரிப்பு நிலையம் 42 சதவீதம் கூடுதலாகக் கொள்முதல் செய்துள்ளது.

(v) ஒடிஸா மாநிலத்தில் உள்ள பாரதீப் சுத்திகரிப்பு நிலையமும் 2 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை அதிகம் வாங்கியுள்ளது.

(vi) உலக அளவில் ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய்யை அதிகம் வாங்கும் நாடுகளில் இந்ததியா 2-ஆவது இடத்தில் உள்ளது. அதாவது ரஷியா தனது கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் 36 சதவீதத்தை இந்தியாவுக்கு அளித்து வருகிறது.

(vii) கொள்முதல் பட்டியலில் முதலிடத்தில் சீனா உள்ளது. ரஷிய கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் 50 சதவீதத்தை சீனா மட்டுமே வாங்கி வருகிறது.

(viii) 3-ஆவது இடத்தில் துருக்கி (6 சதவீதம்), 4-ஆவது இடத்தில் ஐரோப்பிய யூனியன் (5 சதவீதம்) உள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ix) உக்ரைனுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டுள்ள ரஷியா மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

(x) அந்த நாட்டிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளின் பொருள்கள் மீது அமெரிக்கா கூடுதல் வரி விதித்துள்ளது. அதேநேரத்தில் ஈரானுக்கு எதிரான போர் காரணமாக, கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கில், ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு இந்தியாவுக்கு அமெரிக்கா அனுமதியளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

5. இல்லத்தரசிகளின் சமூக மதிப்பு, அவர்களின் உழைப்பிற்கான நீதித்துறை அங்கீகாரம் மற்றும் சட்டப் பாதுகாப்புகள் இருந்தபோதிலும் அதிகரித்து வரும் குடும்ப வன்முறை குறித்த முரண்பாடு.

(i) இல்லத்தரசிகளின் பொருளாதார மதிப்பும் அங்கீகாரமும்

- இல்லத்தரசிகளே நாட்டின் உண்மையான கட்டமைப்பாளர்கள் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- ஒரு முக்கியத் தீர்ப்பில், இல்லத்தரசி ஒருவரின் பணிக்கான மாத மதிப்பை

நீதிமன்றம் சுமார் ₹30,000 என மதிப்பிட்டது.

- வீட்டு நிர்வாகத்தில் பெண்கள் மேற்கொள்ளும் ஊதியம் பெறாத உழைப்பு, இந்தியாவின் மொத்தப் பொருளாதார உற்பத்தியில் 15% முதல் 17% வரை பங்களிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- வெறும் "இல்லத்தரசி" அல்லது "வீட்டை நிர்வகிப்பவர்" என்று அழைப்பதற்குப் பதிலாக, இவர்களின் உண்மையான பங்களிப்பை உணர்த்தும் வகையில் "நாட்டைக் கட்டமைப்பவர்கள்" என்று இவர்களை அங்கீகரிக்க வேண்டும் என்று நீதிமன்றம் பரிந்துரைத்தது.

(ii) நீதித்துறை சூழல்: விபத்து இழப்பீடு

- இந்த விவாதம், பஞ்சாபில் மூன்று குழந்தைகளின் தாயார் ஒருவர் சம்பந்தப்பட்ட 2001-ஆம் ஆண்டு வாகன விபத்து வழக்கிலிருந்து உருவானது.
- கீழ்நிலை தீர்ப்பாயம் ₹2.42 லட்சத்தை இழப்பீடாக வழங்கிய நிலையில், பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் அதை வட்டியுடன் சேர்த்து ₹8.43 லட்சமாக உயர்த்தியது.
- இல்லத்தரசி ஒருவரின் இழப்பு குடும்பத்தைப் பராமரிப்பதற்கான செலவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும், எனவே இழப்பீட்டைக் கணக்கிடும்போது அவர்களின் பணிக்கு அதிக மதிப்பீடு வழங்குவது நியாயமானது என்றும் நீதிபதிகள் சஞ்சய் கரோல் மற்றும் என். கோதிஸ்வர் சிங் ஆகியோர் வலியுறுத்தினர்.

(iii) குடும்ப வன்முறை குறித்த புள்ளிவிவரங்கள்

- 2024-ஆம் ஆண்டிற்கான தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் (NCRB) தரவுகளின்படி, இந்தியாவில் பெண்களுக்கு எதிரான 4.41 லட்சம் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன; அவற்றில் 1.20 லட்சம் வழக்குகள் குடும்ப வன்முறை தொடர்பானவை. மாநில வாரியான விவரங்கள்:
- 21,266 வழக்குகளுடன் உத்தரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- 19,330 வழக்குகளுடன் மேற்கு வங்கம் அடுத்த இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் 3,344 குடும்ப வன்முறை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட குற்றங்கள்: மாநிலத்தின் புள்ளிவிவரங்களில் வரதட்சணை கொடுமை தொடர்பான 2,042 வழக்குகளும், வரதட்சணை கொடுமையால் ஏற்பட்ட 34 உயிரிழப்புகளும் அடங்கும்.

(iv) இல்லத்தரசிகள் மத்தியில் தற்கொலை நெருக்கடி

இந்தியாவில் இல்லத்தரசிகள் மேற்கொள்ளும் தற்கொலைகளில் தமிழ்நாடு தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக முதலிடத்தில் உள்ளது.

- 2021: தமிழ்நாட்டில் 3,221 தற்கொலைகள் (நாடு முழுவதும் பதிவான 23,179 தற்கொலைகளில்).
- 2022: தமிழ்நாட்டில் 3,093 தற்கொலைகள் (நாடு முழுவதும் 25,309-இல்).
- 2023: தமிழ்நாட்டில் 3,080 தற்கொலைகள் (நாடு முழுவதும் 24,048-இல்).
- 2024: தமிழ்நாட்டில் 2,821 தற்கொலைகள் (நாடு முழுவதும் 22,113-இல்).

(v) சட்டப் பாதுகாப்புகளின் செயல்திறன்

- அச்சுறுத்தல்கள், உடல் ரீதியான காயங்கள், பாலியல் துன்புறுத்தல், உணர்வுப்பூர்வமான துன்புறுத்தல் மற்றும் பொருளாதார ரீதியான deprivation (அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுதல்) ஆகியவற்றிலிருந்து பெண்களைப் பாதுகாக்க 'குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005' தற்போது நடைமுறையில் உள்ளது.
- காகித அளவில் போதுமான சட்டப் பாதுகாப்புகள் இருந்தாலும், குடும்ப வன்முறை தொடர்ந்து நிலவுவது, இச்சட்டங்கள் கடுமையாகச் செயல்படுத்தப்படவில்லை என்பதையே உணர்த்துகிறது.

1447/C 3rd Floor, H Block, Anna Nagar West, Chennai 600040, Tamil Nadu. 9445132221